Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.76/2024

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW-1<br>Defence<br>Court |
| Name | : | பிரகாஷ் |
| Father's Name | : | சுப்பையன் |
| Village | : | சின்னமருதுார் |
| Taluk | : | பரமத்திவேலுார் |
| District | : | நாமக்கல் |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 17.06.2026.

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக 17.10.2019 ம் தேதி காலையில் பணியிலிருந்தபோது நானும், என்னுடன் பணிபுரிந்த காவலர் மாரிமுத்து, சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்தவடிவேல் என்பவருடன் மணல் திருட்டு மற்றும் குற்ற நோக்கு வாகனத்தணிக்கை சம்மந்தமாக வேலாயுதம்பாளையம் காவல் நிலைய சரகம்

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

கட்டிபாளையம், தவிட்டுபாளையம், தளவாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை 8.00 மணிக்கு புகளூர் வாய்கால் பாலம் அருகில் சென்று கண்காணித்த போது அந்த வழியாக வந்த TN 45 C 0701 என்ற TVS 50 இருசக்கர வாகனத்தில் மணல் மூட்டையுடன் வந்தாவர் எங்களை கண்டதும் அங்கிருந்து தப்பித்து செல்ல முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்கக அவரது பெயர் சரவணன் என்றும், புகளூர் காவேரி ஆற்றிலிருந்து சிமெண்ட் சாக்கு பைகளில் மணலை அரசு அனுமதியின்றி திருடி விற்பனைக்கு கொண்டு செல்வதாக கூறினார். எதிரியை காலை 8.15 மணிக்கு கைது செய்தும் இருசக்கர வாகனம் மற்றும் மணலை கைப்பற்ற தனிநபர்கள் யாரும் முன் வராததால் உடன் வந்த நானும், காவலர் மாரிமுத்து முன்னிலையில் 8.30 மணிக்கு கைப்பற்று மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா–ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் காலை 9.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனத்தை தான் சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றியதாகும். **அந்த புகைப்படம் அ.சா.ஆ– 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நாங்கள் எந்த வண்டியில் ரோந்து சென்றோம் என்றால் நானும் காவலர் மாரிமுத்துவும், தனி வாகனத்திலும் உதவி ஆய்வாளர் தனி வாகனத்திலும் சென்றோம். பொதுவாக ரோந்து செல்லும போது பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான் அதை உதவி ஆய்வாளர் விசாரணை செய்யும் போது ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நாங்கள் சம்பவ இடம் செல்லவி்லை என்றாலும், உதவி ஆய்வாளர் புள்ளி விவர கணக்கிற்காக பதிவு செய்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.76/2024

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW-2<br>Defence<br>Court |
| Name | : | கருணாநிதி |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | காந்திகிராமம் |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 17.06.2026.

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்த வடிவேல் ஆய்வாளர் பணிபுரிந்த ஜெயராமன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரீச்சையமானது. கடந்த 17.10.2019 ம் தேதி காலையில் பணியிலிருந்தபோது மு.நி.கா. பிரகாஷ், காவலர் மாரிமுத்து, சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகானந்தவடிவேல் என்பவருடன் மணல்

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

திருட்டு மற்றும் குற்ற நோக்கு வாகனத்தணிக்கை சம்மந்தமாக வேலாயுதம்பாளையம் காவல் நிலைய சரகம் கட்டிபாளையம், தவிட்டுபாளையம், தளவாபாளையம் ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை 8.00 மணிக்கு புகளூர் வாய்கால் பாலம் அருகில் சென்று கண்காணித்த போது அந்த வழியாக வந்த TN 45 C 0701 என்ற TVS 50 இருசக்கர வாகனத்தில் மணல் மூட்டையுடன் வந்தாவர் போலீசாரை கண்டதும் அங்கிருந்து தப்பித்து செல்ல முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்கக அவரது பெயர் சரவணன் என்றும், புகளூர் காவேரி ஆற்றிலிருந்து சிமெண்ட் சாக்கு பைகளில் மணலை அரசு அனுமதியின்றி திருடி விற்பனைக்கு கொண்டு செல்வதாக கூறினார். எதிரியை காலை 8.15 மணிக்கு கைது செய்தும் இருசக்கர வாகனம் மற்றும் மணலை கைப்பற்ற தனிநபர்கள் யாரும் முன் வராததால் உடன் வந்த மு.நி.கா. பிரகாஷ், காவலர் மாரிமுத்து முன்னிலையில் 8.30 மணிக்கு கைப்பற்று மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் காலை 9.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து குற்ற எண். 318/2019, ச.பி.379 இ.த.ச r/w 21(1) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) தொடர்ந்து சாட்சிகளான பிரகாஷ் , காவலர் மாரிமுத்து ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை நீதிமன்ற காவலுக்க அனுப்பி வைத்துள்ளார். பின்னர் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் ஜெயராமன் பார்வைக்கு வைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

இவ்வழக்கின் சட்டப்பிரிவை 379 இதச உ/இ 21(1)MMDR Act லிருந்து 379 இதசவாக மாற்றம் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் ஆய்வாளர் விசாரணையை முடித்து வழக்கு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கிற்கான ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், நேரம், இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக எவ்வித சான்றுப்பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**